**செ. கு. எண்:107** **நாள்: 30.07.2017**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 30.7.2017

திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. K. சுப்புராஜ் அவர்கள் 8.7.2017 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கரூர் மாவட்டம், குளித்தலை, அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராகப் பணிபுரிந்து வந்த திருமதி. ஜெ. விஜயகாந்தி அவர்கள் 9.7.2017 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், நக்சலைட் தடுப்பு பிரிவு, ஆய்வாளர் திரு. கதிர்வேல் அவர்கள் நெஞ்சு வலி காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு பலனின்றி 8.7.2017 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர ஆயுதப்படை, 5–ம் படைப்பிரிவில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.P. அருண்குமார் நேரு என்பவர் நெஞ்சு வலி ஏற்பட்டு மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் 9.7.2017 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், வேளச்சேரி வட்டம், எல்.பி சாலை, கெனால் ரோடு சந்திப்பில் மின் இணைப்பினை பழுதுபார்க்கும் பணியில் ஈடுபட்டிருந்த திரு கண்ணன் என்பவரின் மகன் திரு ஜெயபிரகாஷ் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், வடக்கு புதூர் கிராமத்தில், 27.6.2017 அன்று மின்கம்பத்தில் ஏறி பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த திரு மருதையா என்பவரின் மகன் திரு செந்தூர்பாண்டி என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், திருவோணமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு தங்கமுத்து என்பவரின் மகன் திரு பன்னீர்செல்வம் என்பவர் 7.7.2017 அன்று மின்மாற்றியில் ஏற்பட்ட பழுதினை சரி செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், சின்னக்குக்குண்டி கிராமத்தைச் சேர்ந்த திரு முருககவுண்டர் என்பவரின் மகன் திரு கோதண்டன் என்பவர் 10.7.2017 அன்று அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட நிகழ்வுகளில் உயிரிழந்த காவலர்கள் மற்றும் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்கள் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மேற்கண்ட எட்டு நபர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**